வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 205 of 2014

வழக்கு சாட்சி - PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நாச்சிமுத்து | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | திருவள்ளுவர் நகர், வீரபாண்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17.03. 2025.

(1 மற்றும்3.5 எதிரிகள் ஆஜர் 2ம் எதிரி மற்றும் 4ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :** **நாள் : 17. 03. 2025**

1)நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நான் பனியன் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 04.10.1990 வருடம் சின்னசாமி, சுப்பிரமணி, அவரது வகையாறக்கள் நாராணபுரம் கிராமம் க.ச.எண்.506/1ஏ, 2.93 ஏக்கர் நிலத்தினை மேற்படியாரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி நிலத்தில் விவசாயம் செய்து வந்தேன். மேற்படி நிலத்தினை 27.12.2010ம் தேதி சின்னசாமி மற்றும் சின்னசாமி வகையறா எனக்கு எழுதி கொடுத்த நிலத்தினை வடிவேல் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள். இந்த விவரம் 2 மாதம் கழித்து தெரியவந்தது. இதுகுறித்து மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். பல்லடம் காவல்நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இதுகுறித்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் கிரையம் பெற்ற நிலம் குறித்து உரிமையியல் வழக்கு அ.வ.எண்.54/2011ல் என்ற வழக்கு தொடுத்தேன். அதில் எனக்கு சாதகமாக எனது இடத்திற்கு யாரும் வரக்கூடாது என்று உறுத்துக் கட்டளை பிறப்பித்தார்கள். வடிவேல் மற்றும் அவரது ஆட்களும் சென்று எனது நிலத்தில் போட்டிருந்த கொட்டகையை இடித்து விட்டார்கள். பின்பு இதுசம்மந்தமாக மறுபடியும் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அவர்கள் மீது மறுபடியும் வழக்கு பதிவு செய்தார்கள். 08.06.2012ம் தேதி பல்லடம் தாலுக்கா அலுவலகத்திற்கு முன்பாக காலை 11.00 மணியளவில் வடிவேல் அங்கு வந்து கடத்தி

சென்று விடுவதாகவும் வெட்டி கொன்று விடுவதாகவும் சொன்னார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். ஆவணங்களை அ.சா.1 கொண்டு வந்து தாக்கல் செய்து குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA
Date: 2025.03.17 22:49:04 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.